ஓம்.

பரப்ரம்மணே நம:

# ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச்செய்த

# நாநாஜீவவாதக் கட்டளை.

திருத்துருத்தி இந்திரபீடம்

கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்

**ஸ்ரீமத் சச்சிதானந்த சுவாமிகள்**

பதிப்பித்த பிரதிக்கிணங்க

துவாதசாந்த ஸ்தலவாசியும்,

சுவானுபூதிச் செல்வருமாகிய

ஸ்ரீலஸ்ரீ உலகசுந்தர சுவாமியவர்கள் எழுதிய

**ஆரோப சித்திரப்படத்துடன்**

எஸ். கந்தசாமி பிள்ளையால்

மதுரை ஸ்ரீ மீனாம்பிகை பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

விலை] 1948. [அணா 4.

# விவேக சட்கம்.

அனித்திய பூதத் தேகநா னன்று
விந்தியத் தரங்கநா னன்று
நனித்தவாங் கார பிராணவர்க் கங்க
ளன்றுநற் புத்தியு மன்று
தொனித்திடுந் தார மனைசெல்வங் களுக்குத்
தாரமாஞ் சாட்சிநா னென்றுந்
தனித்துநித் தியமாய்ப் பிரத்தியகான் மாவாந்
தற்பதப் பொருளதாஞ் சிவோகம். (1)

உற்பவன் விருத்த னன்றுநா னோர்கா
லத்திலும் நசிப்பவ னன்று
அற்பமாந் தேக காரியமான
அவையெலா மகங்களத் தல்லால்
தற்பத வடிவாஞ் சின்மயமான
எனக்கிலை சகளநிஷ் களமா
யெப்புறத் தேனு மெல்லையற் றிருக்கும்
இன்பசிற் சொரூபமாஞ் சிவோகம். (2)

சத்திய ஞான னந்தமாம் பிரமத்
துதித்திடு மாயையிற் சனித்த
மெத்துமிவ் வுலகஞ் சேதனத் திடையே
நசிக்கும தேதென விளம்பிற்

உ

ஸ்ரீ சற்குருவேநம:

# முகவுரை

---

சர்வதுக்க நிவிர்த்தியும், பரமாநந்தப் பிராப்தியும் முறையே நித்திய நிவிர்த்தியாயும், நித்தியப் பிராப்தியாயும் பொருந்தியுள்ள சுத்தப்பிரமசைதன்யமே தனக்கு நிஜஸ்வரூபமாயிருக்க மனமுண்டாவதற்கு மூலமான அவிசாரப்பகையால் சம்பவித்த தன்னுடைய ஸ்வரூப ஸ்மரண மறதியே மாயை என்றும், அவித்தை என்றும், பிரகிருதி என்றும் சொல்லப்படுகிற அனாதி அஞ்ஞான சத்தியாகி மனதாகப் பரிணமித்து, அஞ்ஞான மோக நித்திரையை உண்டுபண்ணி மித்தையான ஜீவேசுர ஜகத்துக்கள், ஜன்ம ஜராமரணங்கள், தாபத்திரயங்கள் ஆதிவியாதி முதலான கோர சொற்பனங்களைக் காட்டுதலினால் இப்பவதுக்க சாகரத்தில் மூழ்கித் தவிக்கின்ற ஜீவர்களில் சாதன சம்பன்னுளான உத்தம அதிகாரிகள் சற்குரு சத் சாத்திரங்களின் உதவியால் சர்வ அனர்த்தங்களுக்கும் காரணமான அவித்தையின் நிவர்த்திக்கு வித்தையின் உதயமே காரணமென்றும், அவ்வித்தை உதயத்திற்குப் பிரமவிசாரமே காரணமென்றும் தெளிந்து, ஜீவப் பிரம ஐக்கிய ஞானத்தை நேரே தெரிவிக்கின்ற நான்கு

மகா வாக்கிய அர்த்தசார சுருதி சப்தத்தொனி முழக்கங்களால் அதாவது;—சிரவண, மனன, நிதித்தியாச, சமாதி, சாக்ஷாத்கார அப்பியாசங்களினால் மேற்கண்ட அஞ்ஞான நித்திரையைக் கலைத்து, பவ துக்க சமுத்திரத்தைத் தாண்டி, முன் மறந்த தன் நிஜஸ்வரூபமான பிரமதீரததில் விழித்து, ஞானசாக்கிரத்தை அடைகிறார்கள். இப்படி குரு சாஸ்திர உதவியால் நீடித்த காலம் செய்துவரும் பிரம விசாரத்தால் பிரம ஸ்வரூபமே ஆன்மாவென்றும், அவ்வான்ம ஸ்வரூபமே பிரமமென்றும் பிரிவற்ற இவ்வைக்கியமே வேதாந்தமகாவாக்கியங்கள் ஒருமித்துத்தெரிவிக்கின்ற அகண்டார்த்தமென முமுட்சுக்களெல்லாம் அகம்பிரம நிச்சயஞ் செய்யவேண்டுமென்றும் கற்பிதத் தோற்றமெல்லாம் அதிஷ்டான பிரமமன்றி அற்பமும் அயலாக இல்லை என்றும் சுருதியுக்தியால் ரேதிசெய்து நிதம் அகம்பிரமம் பிரமமகமென்று சந்தேகமின்றி அறிய வேண்டுமென்றும், சர்வஜெகத்தும் வேறு, நான்வேறு, பிரமம்வேறு என்னும் பேதபுத்தி, சர்வஜெகத்தும் பிரமமென்றும், அது நானென்றும், நானதுவென்றும் வெகு திடமான பிரம நிச்சயத்தால் நீங்குமன்றி, கர்மம், உபாசனை யாதொன்றினாலும் நீங்காதென்றும் ஆதலால் முமுட்சுக்களெல்லாம் அகண்டபரநிச்சயம்

அடைந்து, அதனுல் மரண முதலான அனர்தவித பயதுக்கங்களுக்கு உற்பத்தி ஸ்தானமான பேதபுத்தியை எவ்விதமும் நீக்கவேண்டுமென்றும், அப்பேத புத்தியின் நீக்கமே அபயபத நிட்டை என்றும், பந்தமற்ற மோக்ஷமென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். ஆதலினுல் அகம்பிரம நிச்சயத்துக்கு அன்னியமாம் உபாயமெலாம் தூரத்தள்ளி, பேதமான மன விகற்பங்கள் தோன்றுது தீர்ந்துபோகும்வரை பிரியமுடன் அனவரதம் இடைவிடாமல் சாதகமான அகம்பிரம நிச்சயத்தைச் சலியாது முமூட்சுக்களெல்லாம் பழக வேண்டும். இதையன்றி மோட்சநிலை பெறுவதற்கு எளிதான உபாயந்தான் எவையுமில்லை.

2. பிரம விசாரத்தால் ஞானம் உண்டாகாத மந்த அதிகாரிக்குச் சுருதி, கிரம சிருஷ்டியைச்சொல்லி ஆரோப அபவாத யுக்தியால் பிரமத்தில் மனம் நிலைக்கச்செய்யும் உபாயத்தைக் காட்டியிருக்கின்றது. அதை அனுசரித்து, ஸ்ரீசேஷாத்திரி சிவனுரென்னும் மஹான் பிரம சூத்திர முதலிய விரிந்த நூல்களைப் பார்க்கச் சக்தியில்லாத மந்த அதிகாரிகளும் பிரமானுபவம் அடையும்வண்ணம் நாநாஜீவவாதக் கட்டளை என்னும் இந்நூலில் இனியவசனரூபமாய்ப் பிரமஸ்வரூபத்தில் மனம் உபசாந்தி அடையச்செய்யும் உபாயமான பெரிய

விஷயத்தையடக்கி வெளியிட்டருளினர். அதில் அபின்னசத்தி அவிகிருத முக்குணங்களால் பிரமாப் பியாசிகளுக்குச் சாதகமாகக் குணங்குறியற்ற சுத்தப் பிரமத்திற்குச் சிறந்த லெட்சணமாகச் சச்சிதானந்த லெட்சணங்களைப் பிரமத்தின் லெட்சணமாகக் காட்டியும், அப்பிரமத்தில் பின்னுசத்தியான மூலப் பிரகிருதி விகுர்த முக்குணங்களால் கற்பித்த ஜீவேசுர ஜெகத்துக்களைக் காட்டும் 35 தத்துவங்களை ஆரோபக் கிரமங்களால் காட்டி, அவைகளை அதிஷ்டானத்துக்கு அன்னியமாய் ஆரோபமில்லை என்றும் அவ்வாரோபத்திற்கு நிஜஸ்வரூபம் அதிஷ்டானமே என்னும் நியாயப்படி அபவாதம் செய்யச் சாதகமான லயசிந்தனை காட்டியும் இருக்கிறது. இந்த லயசிந்தனையால் பிரமஸ்வரூபத்தில் மனம் ஸ்திரப்படுகிறது. அப்போது திரிசியங்களான பொய்யெல்லாம் பிரம சொரூபமாய் விளங்குவதால் இது மந்த அதிகாரிகளுக்குச் சுருதி கூறும் மோக்ஷ உபாயம். அப்படி லயசிந்தனை செய்வதற்கு மேற்கண்ட ஆரோபக் கிரமங்கள் நூலிற் சொல்லியபடி மனதில் அழுத்தமாய்ப் பதித்திருந்தாலொழிய லயசிந்தனை பிரமசித்தியைக் காட்டாது. ஆகையால் மேற்கண்ட ஆரோபங்களை நூலிற் காட்டியபடி மனதில் செவ்வையாய்ப் பதியச்செய்தற்குச் சாதன

மாக இந்நூலிற்கிணங்க அடியிற்கண்ட ஆரோப சித்திரப்படத்தை வரைந்து, அனேக சாதுக்கள் அதை அங்கிகரித்தமையால் அப்படத்தை இத்துடன் வெளியிடலானேன். வேதாந்தத்தில் மனது ருசித்த பிரதம அப்பியாசிகளான இளம் பக்குவர்கள் நூலுடன் படம்சேர்ந்த புஸ்தகத்தை வாங்கி, அப்பியாசிப்பார்களானால் நூலின் ஞானம் அனாயாசமாய் மனதில் போதப்படும்.

இங்ஙனம்,

**உலகசுந்தரம் பிள்ளை,**

2-வது கிரேட் ரிட்டையர்டு வக்கீல்,

மதுரை.

---

காசி, ப்ரம்மஸ்ரீ

பரமானந்த சுவாமிகளின் பாதசேவைகளில் ஒருவரான

சிவானந்த சுவாமிகள் எழுதிய,

## சாற்று வெண்பா.

சீரோங்கு சேஷாத் திரிசிவனார் நூலிதற்கா
பாரோப சித்திரமொன் றுங்கமைத்தான்—பாரோங்கு
மெய்குலமு முட்சுக்க வீடேற ஞானவான்
நங்குலக சுந்தரமே தான்.

திருத்துருத்தி இந்திரபீடம்
ஈசூர் சச்சிதானந்த சுவாமிகள் ஆதீனம்
தண்டறை பிரஹ்மஸ்ரீ சுப்பராய ஆசாரிய சுவாமிகள்
மாணவர்களில் ஒருவராகிய
மதுரை ஸ்ரீ மீனும்பிகைப் பிரஸ் மானேஜர்
எஸ். கந்தசாமிபிள்ளையவர்களியற்றிய
சாற்றுப் பாயிரம்.

ஆசிரியம்.

பிரமசை தன்னியம பின்னமாஞ் சத்தியொடு
பீடுறக் குலவி யாங்கு
பிரகிருதி மாயையாய்ப் பின்னுமைம் பூதமாய்ப்
பேதபுவ னுதி தோற்றம்
மரமதனுள் வித்தாயும் மற்றதனுண் மரமாயும்
மாறிநிகழ் கின்ற வித்தை
மனவிகிர்த பொறியைந் தடக்கிலது காணலாம்
வந்தணுகும் முத்தி யின்பம்
வரமிகுஸ்ரீ சேஷாத்ரி சிவனர் மஹான்*ஜீவ
வாதகட் டளையா மிதில்

* ஜீவவாதகட்டளை - நாநாஜீவவாதக்கட்டளை.

வகுத்தனர்மு மூட்சுக்கள் மன்னுபெறு மாறிந்த
மறையுணரு மதிகாரிகள்
சிரமமற வாரோப சித்திரப் படமொன்று
தெற்றனவு மெழுதி யீந்தான்
சிற்பரா னிலகண்ட திடசித்த மெய்ஞ்ஞானி
தேறுலக சுந்தரன் மனே.

வெண்பா.

இவ்விருவர் இத்தகையர் இவ்வளவில் இவ்வுலகில்
எவ்விதத்த மேம்பா டியற்றினர்கொல்—ஒவ்வும்
இவரே இவர்க்கிணையாம் இந்நால் பயின்ருர்
அவரே அறிவா ரதை.

---

மதுரைத் தமிழ் வித்வான்

ஸ்ரீ நா. கிருஷ்ணசாமிநாயுடவர்கள் இயற்றிய

சாற்றுப் பாயிரம்.

ஆசிரியம்.

உலகநூல் அறிவுநூல் எனவிருவ கைத்தவையுள்
உலகநூ லறிவ தென்ருல்
உணர்வரிய பாஷைகளை யொத்திணூஉ மவையவைக
ளுறுவெழுத் தறிதல் போன்று

இலகுமோ ரறிவுநால் அறிவதென் றால்முன்னர்
எங்கள் சேஷாத்ரி சிவனார்
இயற்றுநா நாஜீவ வாதகட் டளையெனும்
இந்தநூ லறிதல் வேண்டும்
பலபல மஹாவாக்ய பிரமசூத் திரமெலாம்
பார்க்கவும் பார்த்த வண்ணம்
பழகவும் வழிகாட்டி யாமிந்த நூற்கினிது
பகருமா ரோப சித்ர
அல்குதரு படமொன்று முதலிளம் பக்குவர்கள்
அப்பியா சித்து ணரவே
அருளிய மஹான் உலக சுந்தரம் எனிலம்ம
அவரிருவ ரவர் பெரியரே!

வெண்பா.

தத்துவந்தொன் னூற்றாறின் தன்மைநனி யாய்வார்கள்
அத்துவித மானநிலை யாவார்கள் —முத்திநிலை
தேடவரும் சேஷாத் திரிசிவனார் நூலிதனை
நாடவரும் ஞானம் நமக்கு.

ஓம்:
பரப்ரம்மணேநம:

# நாஞசிவவாதக்கட்டளை.

சுத்தப் பிரமமா யிருக்கின்ற சர்வசாட்சியினிடத்திலே அக்கினியிற் சூடுபோல அபின்னமாக ஒரு சத்தியுண்டு. அந்தச் சத்தி அதீதப் பிரமத்தி லடங்கியிருக்கும்போது சுத்தப் பிரமமென்று பெயர். இந்தச் சத்தி விசிரிம்பித்துச் சுத்தப் பிரமத்தை வியாபிக்கும்போது பரை வியாபகத்துக்குள் ளிருந்தபடியினாலே பரப்பிரமமென்று பெராயிற்று.

இலட்சண சூனியமா யிருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரமத்தினுடைய சந்நிதானத்தில் புருஷ சமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ் சனித்தாற்போல அவிகிர்த சத்வ ரஜஸ் தமோகுணங்களுண்டாயின. இந்தச் சுத்த சத்துவத்திற்கு ஆனந்தரூப சத்தியென்றுபெயர். சுத்த ரஜசுக்குச் சித்துரூப சத்தியென்று பெயர். சுத்த தமசுக்குச் சத்து ரூப சத்தி யென்று பெயர். இந்தக் காரணமான ஆனந்தரூப சத்தியுடனே பரப்பிரமம் கூடிச் சர்வானந்த சுழுத்தியை யடைகின்றபோது பரப்பிரமமென்கின்ற பெயர் போய்ப் பரமானந்தரென்கின்ற

பெயர் வந்தது. இந்தப் பரமானந்தர் சித்துரூப சத்தியுடனே கூடிச் சர்வப்பிரகாச மென்கின்ற சொப்பனவத்தையை யடைகின்றபோது பரமானந்தரென்கின்ற பெயர் போய்ப் பரிபூரண ரென்கின்ற பெயர்வந்தது. இந்தப் பரிபூரணர் சத்துரூப சத்தியுடனே கூடிச் சர்வவியாபக மென்கின்ற சாக்கிராவத்தையை யடைகின்றபோது பரிபூரணரென்கின்ற பெயர் போய்ப் பரனென்கின்ற பெயர் வந்தது.

இந்த அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிரமத்தினிடத்திலே சுத்தியில் ரசிதந் தோன்றினாற்போல மூலப்பிரகிருதியென்றொரு சத்தியுண்டாயிற்று. அந்த மூலப்பிரகிருதியும் விகிர்த குணமாகிய முக்குணத்துடனே கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவ குணத்தை மாயையென்றும் சர்வக்ஞ உபாதியென்றும் ஈசுவர காரண சரீரமென்றும் சொல்லப்படும். இந்த மாயையினிடத்திலே நிர்மலஜலப் பிரதிபிம்பம்போலப் பிரமம் சலட்சணமாகப் பிரதிபிம்பிக்கும். இந்தப் பிரதிபிம்ப சைதன்யத்தைச் சர்வக்ஞராகிய ஈசுவரனென்று சொல்லப்படும்.

இந்தச் சத்வகுண மாயையி னிடத்திலே சத்துவத்தில் சத்துவம் சத்துவத்தில் இராஜசு சத்துவத்தில் தமசு என மூன்று குணங்களுண்டாயின. இதில் சத்

துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈசுவரன் ஜகத்தை இரட்சிக்கையினால் விஷ்ணுவென்று சொல்லப்படும். சத்துவத்தில் இராஜசு பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தைச் சிருஷ்டிக்கையினால் பிரமாவென்று சொல்லப்படும். சத்துவத்தில் தமசு பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈசுவரன் சகத்தைச் சங்காரம் பண்ணுகையினால் உருத்திரனென்று சொல்லப்படும். இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவகுண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப்பிரகிருதியின் இரசோகுணம் அனேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றுஞ் சீவகாரண சரீரங்களென்றும் ஒன்றுக்கொன்று தாரதம்மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலும் மலின சலப் பிரதிபிம்பம்போலப் பிரம சைதன்னியம் பிரதிபிம்பிக்கும். இந்தப் பிரதிபிம்ப சைதன்யங்களைக் கிஞ்சிக்ஞரென்றும் சிதாபாசரென்றும் பிராக்ஞரென்றும் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் இராஜசத்தில் சத்துவம் இராஜசத்தில் இராஜசம் இராஜசத்தில் தாமசமென மூன்றுகுணங்களுண்டு. இராஜசத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் தத்துவக்ஞான நிஷ்டனாவன். இராஜசத்

தில் இராஜசம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் காமக்குரோதபரனுய்க் கர்ம்மநிஷ்டனுவன். இராஜசத்தில் தாமதம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கங்களை யுடையனுவன். இப்படி மூலப்பிரகிருதியின் இராஜச குண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப்பிரகிருதியின் தாமதகுணத்திற்கு ஆவரணம் விட்சேபமென் றிரண்டு சத்திகளுண்டு. இதில் ஆவரணசத்தியென்பது தத்துவக்ஞானியையும் ஈசுவரனையுந் தவிர மற்றச் சீவர்களுக்கெல்லாம் சரீரத்திரயம் சிதாபாசன் சாட்சி சைதன்னியங்களை யொன்றுக்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைக்கப்பட்ட சீவன் இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நானென்று அபிமானிப்பன். இந்த அபிமானத்தை அகங்காரக் கிரந்தி யென்றும் சம்சார பந்தமென்றும் சொல்லப்படும். சற்குரு கடாட்சத்தினலே இந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவத்திற்கும் ஒன்றுக்கொன்று பேதந் தெரிகின்றதே முத்தி. இப்படி ஆவரண சத்தியின் காரியஞ் சொல்லப்பட்டது.

இனி, விட்சேப சத்தியினிடத்திலும் சத்த தன்மாத்திரையான ஆகாசம் பிறந்தது. ஆகாசத்திலும்

பரிச தன்மாத்திரையான வாயு பிறந்தது. வாயுவிலும் ரூப தன்மாத்திரையான அக்கினி பிறந்தது. அக்கினியிலும் ரச தன்மாத்திரையான அப்புப் பிறந்தது. அப்புவிலும் கந்த தன்மாத்திரையான பிருதிவி பிறந்தது. இந்தச் சூட்சும பஞ்ச பூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விட்சேப சத்தியினிடத்திலே தாமதத்தில் சத்துவம் தாமதத்தில் இராஜசம் தாமதத்தில் தாமசமென்று அற்பங் கருவிருந்தபடியினாலே அதன் காரியமான இந்தத் தன்மாத்திரையான பஞ்ச பூதங்களும் முக்குணத்துடனே பிறந்தன. இந்தப்பஞ்ச பூதங்களுக்குத் தன்மாத்திரைகளென்றும் அபஞ்சீகிருத பூதங்களென்றும் சூட்சும பூதங்களென்றும் முக்குண பூதங்களென்றும் சாத்திரங்களிலே சொல்லப்படும்.

இந்தச் சூட்சம பூதங்களினின்றும் சூட்சும சரீரங்களும் தூலபூதங்களும் பிறந்தன. அஃதெங்ஙனமெனில், ஆகாச முதலான பஞ்ச பூதங்களினுடைய சத்துவாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொருமாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக் கரணத்தில் ஆகாசத்தின் அம்சங் கூடினதற்கடையாளம்: இந்த அந்தக் கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கும் இடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற விருத்திக்கு உள்ள

மென்று பெயர். இந்த அந்தக் கரணத்தில் வாயுவின் அம்சங் கூடினதற் கடையாளம்: இந்த அந்தக் கரணமும் வாயுவைப்போல அலைகின்றது. இப்படி யலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர். இந்த அந்தக்கரணத்தில் அக்கினியின் அம்சங் கூடினதற்கடையாளம்:இந்த அந்தக் கரணமும் அக்கினியைப்போல இது இன்னதென்று விளக்குவிக்கிறது: இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தியென்றுபெயர். இந்த அந்தக்கரணத்தில் அப்புவின் அம்சங் கூடினதற் கடையாளம் இந்த அந்தக்கரணமும் அப்புவைப்போல விஷயங்களில்பற்றி யிழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர். இந்த அந்தங்கரணத்தில் பிருதிவியின் அம்சங் கூடினதற் கடையாளம்: இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப்போலக் கடினமாக நின்று நானென்று அபிமானிக்கின்றது. இப்படி அபிமானிக்கின்ற விருத்திக்கு அகங்காரமென்று பெயர்.

இன்னும் ஆகாச முதலான பஞ்சபூதங்களினுடைய சத்வாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொரு மாத்திரை எடுத்துத் தனித்தனியேவைத்தது சுரோத்திராதி ஞானேந்திரியமென்று சொல்லப்படும். இதில் சுரோத்திரம் ஆகாசத்தின் அம்சமானபடியினாலே ஆகாசத்தின் குணமான சப்த மாத்திரத்தை யறியும். துவக்கு வாயு

வின் அம்ச மானபடியினுலே வாயுவின் குணமான பரிச மாத்திரத்தை யறியும். சட்சு அக்கினியின் அம்ச மானபடியினுலே அக்கினியின் குணமான ரூபமாத் திரத்தை யறியும். சிங்ஙுவை அப்புவின் அம்சமான படியினுலே அப்புவின் குணமான ரச மாத்திரத்தை அறியும். ஆக்கிராணம் பிருதிவியின் அம்சமானபடி யினுலே பிருதிவியின் குணமான கந்த மாத்திரத்தை யறியும். இப்படி ஐந்தும் ஒன்ருெடொன்று கூடாத படியினுலே ஒன்று மற்ருென்றன் குணங்களைக் கிர கிக்க அறியாது. அந்தக்கரணத்தில் ஐந்து மாத்திரையு மொன்ருய்க் கூடினதுகொண்டு ஐந்திந்திரியங்களினு லும் ஐந்து விஷயங்களையும் அறியும். இந்தச் சத்வ குணத்திலுண்டான அந்தக்கரணம் ஐந்தும் ஞானேந் திரியம் ஐந்தும் ஆகப் பத்தும் சாத்விக அம்சமான படியினுலே ஞானசாதன மாயின.

இன்னும் ஐந்து பூதங்களினுடைய இராஜசாம்சத் திலேபூதத்திற்கு ஒவ்வொருமாத்திரையெடுத்து ஒன்ரு கக் கூட்டிவைத்தது வியானுதி பஞ்ச வாயுக்களாயின. இதில்வியானவாயு ஆகாசத்தின் அம்சமானபடியினுலே ஆகாசத்தைப்போலச் சர்வாங்கமும்வியாபித்திருக்கும். பிராணவாயுவாயுவின் அம்சமானபடியினுலேவாயுவைப் போல இருதயத்திலிருந்து நாசிபாதிபரியந்தம்அலையும்.

அபானவாயு அக்கினியின் அம்சமானபடியினாலே அக்கினியைப்போலச் சாடராக்கினியாக உஷ்ணித்துக்கொண்டு குதத்தைப்பற்றி நின்று உண்ட அன்ன பானாதிகளைச் சீரணிப்பிக்கும். சமானவாயு அப்புவின் அம்சமானபடியினாலே சரீர நடுவான நாபித்தானத்தில்நின்று உண்ட அன்ன பானாதிகளைச் சகல நாடிகளிலும் அப்புவைப்போல இழுக்கும். உதானவாயு பிருதிவியின் அம்சமானபடியினாலே கண்டத்தைப்பற்றி நின்று பிருதிவியைப்போலக் கடினமாக நின்று கடையும். இந்தப் பஞ்சவாயுக்களையு மல்லாமல் வாந்தி பண்ணிவைக்கின்றவன் நாகனென்றும், இமைத்து விழிப்பிக்கின்றவன் கூர்மனென்றும், குறுகுறுத்துத் தும்மச் செய்கின்றவன் கிரிகரனென்றும், கொட்டாவி விடுவிக்கின்றவன் தேவதத்தனென்றும், வீங்குவிக்கின்றவன் தனஞ்சயனென்றும் வேறே ஐந்து வாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவர். இந்த ஐந்தும் பிராணனுடைய தொழிலானபடியினாலே வேறல்ல.

இன்னும் ஆகாசமுதல்பஞ்சபூதங்களினுடையஇராஜசாம்சத்திலே பூதத்திற்கு ஒவ்வொருமாத்திரை யெடுத்துத்தனித்தனியேவைத்தது வாக்காதி கர்ம்மேந்திரியமென்று சொல்லப்படும். இதில் ஆகாசத்தினிடமாக வாக்கு வசனிக்கும். வாயுவினிடமாகப் பாணியிடுதல்

ஏற்றல் செய்யும். அக்கினியினிடமாகப் பாதம் நடக்கும். அப்புவினிடமாகப் பாயுரு மலசலாதிகளை வெளியிலே யிழுக்கும். பிருதிவியி னிடமாக உபத்தம் சுகத்தைப் பண்ணும். இந்த ஐந்தும் தனித்தனியே யிருந்ததுகொண்டு மறுதொழில் செய்யமாட்டா. வியானுதிவாயு ஐந்து மாத்திரையு மொன்ருய்க் கூடினது கொண்டு கர்ம்மேந்திரியம் ஐந்தின் வழியினுலும் ஐந்து தொழிலேயுஞ் செய்து முடிக்கின்றது. இந்த வாயுக்களைந்தும் கர்ம்மேந்திரியம்ஐந்தும் ஆகப்பத்தும் இராஜசாம்சமானபடியினுல் கிரியாசாதன மாயின.

அந்தக்கரணம் ரு-ம், ஞானேந்திரியம் ரு-ம், வாயுக்கள் ரு-ம், கன்மேந்திரியம் ரு-ம், ஆக உ0 தத்துவங்களும் சூட்சமசரீரமென்று சொல்லப்படும். இந்தச் சூட்சும சரீரத்தை மாயாப் பிரதிபிம்பரா யிருக்கின்ற ஈசுவரன் அவித்தையாய்ப் பிரதிபிம்பரா யிருக்கின்ற சீவருக்குப் பேருக் கொவ்வொரு சரீரஞ் சிருட்டித்துக் கொடுத்தார். அப்போது பஞ்சபூதத்தினுடைய சாத்விகாம்சமும் இராஜசாம்சமும் செலவழிந்தன. தாமதகுணமாத்திரம் சேடித்தது. சூட்சும சரீரம் வாங்காத சீவருக்கெல்லாம் இன்னுமொரு சிருட்டிக் காகட்டுமென்று நிறுத்தினர். இப்படிச் சூட்சும சரீரஞ் சொல்லப்பட்டது.

இனித் தூல பூத உற்பத்தி சொல்லுகிறோம். அஃ தெங்ஙனெனில், மிஞ்சின தாமதமாயிருக்கின்ற ஐந்து பூதங்களையும் ஒன்றிரண்டாகப் பகுத்து, முதற்பாதி ஐந்தையுமொன்றை நாலாக்கி, இரண்டாம் பாதி ஐந்துடனே தன் அம்சத்துடனே கூட்டாமல் மற்ற நாலு பூதங்களுடனும் பூதத்திற்கு அரைக்கால் மாத்திரையாகக் கொடுக்கின்றது பஞ்சீகரண மென்று சொல்லப்படும். இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதங்களிலே ஆகாசத்திலே பரிசரூப ரச கந்தங்களாகிய நான்கு குணங்களும் வியாப்பிய மானபடியினால் அதிரிசியமாய்ப்போக நிச குணமாகிய சப்தமும், வாயுவிலே ரூப ரச கந்தமாகிய மூன்று குணங்களும் வியாப்பியமானபடியினால் அதிரிசியமாய்ப்போகக் காரண குணமாகிய சப்தமும் நிசகுணமாகிய பரிசமும், அக்கினியிலே ரச கந்தங்களாகிய இரண்டு குணங்களும் வியாப்பிய மானபடியினால் அதிரிசியமாய்ப்போகக் காரண குணங்களான சப்த பரிசமும் நிச குணமாகிய ரூபமும், அப்புவிலே கந்தகுணமும் வியாப்பியமானபடியினால் அதிரிசியமாய்ப் போகக் காரண குணமாகிய சப்த பரிச ரூபமும் நிச குணமாகிய ரசமும், பிருதிவியிலே சப்த பரிச ரூப ரச கந்தங்களும் தோன்றின.

முன் சூட்சும பூதத்திலிருந்து சூட்சும சரீரம் பிறந்தாற்போலப் பஞ்சீகரணம் பண்ணின தூல பூதத்தி

னின்றும் ஆறு தத்துவமாய் நால்வகைப்பிறப்பாய் மூவகைச் சாதியாயிருக்கின்ற தூல சரீரங்கள் பிறந்தன.

இதில் ஆறுதத்துவமாவது யாதெனில் சர்மம், உதிரம், மாமிசம், சனுயு; அத்தி, மச்சை இந்த ஆறுவகையுந் தூலசரீரம். நால்வகைத் தோற்றமாவது யாதெனில் சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பீசம் ஆக நாலு. மூன்று சாதி யாதெனில் இகலோக பரலோக புத்தி இரண்டையுங் கொடுக்கின்ற மாநுட சரீரம் உத்தமசாதி. பரலோக புத்தியை மறைத்து இகலோக புத்தி மாத்திரம் அறிகின்ற பசு பட்சி முதலானவை மத்திமசாதி. இரண்டு லோகத்துப் புத்தியையும் மறைத்திருக்கின்ற மரங்கொடி செடி அதம சாதி. இப்படிப் பிருதிவி தத்துவமாயிருக்கின்ற பூலோகத்தில் கண்டாற்போல அப்பு அக்கினி வாயு ஆகாச மென்னப்பட்ட தத்துவங்களிலும் நிரைநிரையே பிதிருலோகம் தெய்வலோகம் யட்ச கந்தருவ லோகம் சித்தர் லோகங்களிலும் நட்சத்திரமாகத் தோற்றுகின்ற சந்திரன் முதலான பிதிர்க்கள் சூரியன் முதலான தேவதைகள் கந்தருவர் சித்தர் என்னப்பட்டவர்களெல்லாம் உத்தம சரீரம். காமதேனு, அயிராவதம், அன்னம், கருடன் முதலாயின மத்திம சரீரம். கற்பக விருட்சம் பாரிசாத முதலாயின அதம சரீரம்.

இந்தத் தூலசரீரமே அன்னமய கோசம். சூட்சும சரீரம் மூன்று கோசமாயிருக்கும் அதெங்ஙனமென்னில் பிராணவாயுவுங் கன்மேந்திரியமுங்கூடிப் பிராணமய கோசம். மனதும் ஞானேந்திரியமுங்கூடி மனோமயகோசம். புத்தியும் ஞானேந்திரியமுங்கூடி விஞ்ஞானமயகோசம். காரண சரீரமே ஆனந்தமய கோசம். இப்படிப் பஞ்ச கோசஞ் சொல்லப்பட்டன.

ஆறுதத்துவமாயிருக்கின்ற தூலசரீரத்திலே சூட்சும சரீரமிருக்கின்றதெப்படி யென்னில், கர்ம்மேந்திரியமான வாக்கும் ஞானேந்திரியமான சிங்குவையும் வாயிலிருக்கும். உதானவாயுவும் மனதும் கண்டத்திலிருக்கும். பிராணவாயுவும் புத்தியும் இருதயத்தில் இருக்கும். சமானவாயுவும் சித்தமும் நாபியிலிருக்கும். அபானவாய்வும் பாயுருவும் குதத்தில் இருக்கும். வியானவாயுவும் ஞானேந்திரியமான துவக்கும் அகங்காரமும் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். உச்சியிலே தேயுவும் கருவிழி நுனியிலே சட்சு இந்திரியமும் காதுக்குள்ளே சுரோத்திரேந்திரியமும் மூக்குக்குள்ளே ஆக்கிராணேந்திரியமும் கழுத்துக்குமேல் தனித்தனியேயிருக்கும். கழுத்துக்குக் கீழே கைகாலும் குய்யத்தின்கீழ் பாணி பாதம் உபத்தம் இவை தனித்தனியேயிருக்கும். இப்படித் தூலசரீரதத்துவம் கூ-ம், அதிற் குடிபுகுந்த

சூட்சும சரீரதத்துவம் ௨௦-ம் ஆகத்தத்துவம் ௨௬-ம் பஞ்ச பூதங்களின் காரிய மானபடியினாலே ஒருமைப் பாடாகக் காரிய சரீரமென்று சொல்லப்படும்.

காரண சரீரமும் சிதாபாசனும் சாக்கிரத்திலே இந்த இருபத்தாறு தத்துவத்துடனே கலந்துநின்ற போது விசுவனென்றும் வியவகாரிக சீவனென்றும் சொல்லப்படும். சொப்பனத்திலே தூல சரீரத்தைக் கைவிட்டு அந்தக்கரணத்துடனே கூடிநின்றபோது தைசதனென்றும் பிராதிபாதிக சீவனென்றும் சொப் பன கற்பிதனென்றுஞ் சொல்லப்படும். சுழுத்தியிலே காரிய சரீரம் இருபத்தாறையுங் கைவிட்டுக் காரண சரீரத்தைமாத்திரம் பொருந்தியிருக்கும்போது பிராக்ஞ னென்றும் பாரமார்த்திக சீவனென்றும் சொல்லப்படும். பிரம சைதன்னியம் சாக்கிரத்துக்குச் சாட்சியாயிருக் கும்போது சீவாத்மாவென்றுஞ் சொப்பனத்துக்குச் சாட்சியா யிருக்கும்போது அந்தராத்மா வென்றுஞ் சுழுத்திக்குச் சாட்சியா யிருக்கும்போது பரமாத்மா வென்றும் அவத்தாத்திரய சாட்சியா யிருக்கும்போது ஞானாத்மாவென்றுங்கூடத்தனென்றுஞ் சொல்லப்படும். இப்படிச்சீவனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்தையுஞ் சொல்லப்பட்டன.

இனி, ஈசுவரனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்தை யும் சொல்லும்படி லோக கற்பனையாகத் தோற்றுகின்ற

தூல பஞ்சபூதங்களும் அதில்தோன்றின மூன்று சாதியாயிருக்கின்ற தூலசரீர சமட்டியுங்கூடி ஈசுர தூல சரீரமென்றும் விராட்டென்றுஞ் சொல்லப்படும். இதனுடனே கூடிச்சாக்கிராவத்தையைப் பொருந்தியிருக்கின்ற ஈசுரன் வைசுவானரனென்றும் இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்னியம்பிரமாவென்றும் சொல்லப்படும். சூட்சும பூதங்களைந்தும் அதில் தோன்றின சூட்சும சரீர சமட்டியுங்கூடி ஈசுவர சூட்சும சரீரமென்றும் இரணிய கர்ப்பனென்றும் சொல்லப்படும். இதனுடனேகூடிச் சொப்பனவத்தையைப் பொருந்தியிருக்கின்ற ஈசுவரன் சூத்திராத்மாவென்றும் இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்யம் விஷ்ணுவென்றுஞ் சொல்லப்படும். இந்தத் தூல சூட்சும மிருவகைக்கும் வாசனையுடனே கூடின மாயை, ஈசுர காரண சரீரமென்றும் அவ்வியாகிருதமென்றுஞ் சொல்லப்படும். இதனுடனேகூடிச் சுழுத்தியவத்தையைப் பொருந்தியிருக்கின்ற ஈசுரன் அந்தரியாமியென்றும் இந்த இருவகைக்கும் அதிட்டான சைதன்யம் உருத்திரனென்றுஞ் சொல்லப்படும். சீவன் தன் மூன்றவத்தையிலுந் தன் மூன்று சரீரமாக இருக்கின்ற இருபத்தேழு தத்துவத்துடனும் நானென்று கலந்து நிற்கின்றாற்போல, ஈசுவரனும் தம்முடைய மூன்று சரீரமாயிருக்கின்ற முப்பத்

திரண்டு தத்துவத்துடனும் மூன்றவத்தையிலுங் கலந்து நிற்பர்.

ஆகையினால் சிதாபாசன் தன் சரீரமாத்திரமே கலந்து நிற்பன். ஈசுவரன் தம்முடைய சரீரமாகிய சகல சரீரங்களோடுஞ் சகல பிரபஞ்சங்களோடுங் கலந்துநிற்பர். இந்த இருவகைக்குஞ் சாட்சியாயிருக்கின்ற பிரமசைதன்யமுஞ் சகல சரீரத்திலுஞ் சகல பிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலும் பத்துத்திக்கையும் அதிக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

சீவனுக்குத் தூலசரீர வியவகாரத்துக்கு அன்னமயமான சட்கோச தத்துவம் சூ, சூட்சும சரீர தத்துவம் உO, சீவன் ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம் ரு; ஆகத் தத்துவம் ௱க. சூட்சுமசரீர வியவகாரத்துக்குச் சூட்சுமசரீரதத்துவம் உO. சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம் ரு. ஆகத் தத்துவம் உரு. காரண சரீர வியவகாரத்துக்குச் சீவன், ஈசுவரன், அவித்தை, வித்தை, பிரமம் ஆக-ரு. சீவ வியவகாத்துக்குச் சீவன் ஈசுரன், பிரமம் ஆக-௩. சாட்சிவியவகாரத்துக்குச் சாட்சி-க. ஈசுவரனுக்குத் தூலசரீர வியவகாரத்துக்குச் சமட்டி அன்னமயகோச தத்துவம் - சூ, சமிட்டி சூட்சும சரீர தத்துவம் உO, சமட்டி சீவன் அவித்தை உ, ஈசுவரன், வித்தை, பிரமம் - ௩, பூதம்-ரு, ஆகத் தத்துவம்-௱சூ,

சூட்சும சரீர வியவகாரத்துக்குச் சமட்டி சூட்சும சரீ தத்துவம்-௨0, சமட்டி சீவன் அவித்தை-௨, சூட்சும பூதம் - ரு, ஈசுவரன், வித்தை, பிரமம்-௩, ஆகத் தத்துவம்-௩0. காரணசரீர வியவகாரத்துக்கு ஈசுவரன், வித்தை, பிரமம்-௩. ஈசுர வியவகாரத்துக்கு ஈசுவரன் பிரமம் ௨. பிரமவியவகாரத்துக்கு பிரமம்-க. இந்திரியவியவகாரத்துக்கு இந்திரியம் க, சட்கோசதத்துவம் ௬, கரணம் ரு, வாயு-ரு, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-ரு, ஆகத் தத்துவம்-௨௨. மனோராச்சிய வியவகாரத்துக்குக் கரணம்-ரு, சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை பிரமம்-ரு, ஆகத்தத்துவம்-௧0. இப்படித் தத்துவங்களினுடைய தோற்றமும் நிலையுஞ் சொல்லப்பட்டன.

இனித் தத்துவ மொடுங்குகின்ற வழி சொல்லுகிறோம். அதெங்ஙனமெனின் சகல சீவர்களிடத்திலே இருக்கின்ற தூல சரீரங்களும் தனக்காதாரமான தூல பூதங்களுடனே மடிந்து பூதமாத்திரமாய் ஒடுங்கும். இந்தத் தூலபூதங்களும பஞ்சீகரணம்விட்டுத் தன் மாத்திரையான தாமதகுண பூதங்களாக மிஞ்சும். அப்போது கேவல இரணிய கர்ப்பாவத்தையென்று சொல்லப்படும். சூட்சும சரீரம் இருபது தத்துவமுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடைய சாத்விகருணமும் இராஜச குணமுமாக வொடுங்கும். அதெங்ஙனெனனில் சகல

பிராணிகளிடத்திலுமிருக்கின்ற அகங்காரமுமாக்கிரா ணமும் உதானவாயுவும் உபத்த இந்திரியமும் பிருதி வியி லொடுங்கும். சித்தமும் சிங்வையும் சமானனும் பாயுருவும் அப்புவிலொடுங்கும். புத்தியும் சட்சுவும் அபானனும் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவி லொடுங்கும். தேயுவும் சுரோத்திரமும் வியானனும் வாக்கும் ஆகாச த்திலொடுங்கும். அப்போது பழையபடியே முக்குண பூதங்களாகும். இந்தச்சூட்சுபூதங்களுள் பிருதிவி அப் புவிற் கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற் சுவறி யொடுங்கும். அக்கினியும் விளக்குப்போல வாயுவி லணைந் தொடுங்கும். வாயுவும் ஆகாசத்திலோய்ந் தொ டுங்கும். ஆகாசமும் விட்சேப சத்தியி லொடுங்கும். ஆவரண சத்தியும் விட்சேப சத்தியும் மூலப் பிரகிரு தியின் தாமத குணமாத்திரமாய் ஆலமரம் ஆல விதையி லொடுங்கிறாற்போல இன்னும் ஒருசிருட்டிக்குவித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அவை அதி னுண்மையான மூலப்பிரகிருதியென்று சொல்லப்பட்ட விந்துதத்துவத்தி லொடுங்கும். அந்த விந்துவும் பாம் பென்கின்ற பெயர்போய்ப் பழுதையாய்க் கண்டாற் போலத் தனக் கதிட்டானமான பிரம சைதன்யமாத் திரமாக வொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம்

மெய்ப்பொரு ளொன்றாகக் கண்டு அதுவே சுபாவ சித்தமாய் நிசமாய் இருக்கின்ற தன்வடிவெனக் கண்டு தெளிந்து கவலை கெட்டிருக்கின்றவனே சீவன்முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித்தோற்றி யொடுங்குகின்ற தத்துவம் ௩௯, அஃதெங்ஙனென்னில் பூதம் - ரு, தூல சரீரதத்துவம் ௯, சூட்சும சரீரதத்துவம் - ௨௦, காரண சரீரமான மாயை அவித்தை-௨, இதிற் பிரதிபிம்பித்த சீவன்ஈஸ்வரன் ௨, இவற்றிற்கெல்லாம் அதிட்டான சைதன்யமாயிருக்கின்ற பிரமம் - க, ஆகத் தத்துவம் - ௩௯.

இதிற் சீவருக்குச் சமுதாயதத்துவம், பூதம்-ரு, மாயை-க, மாயாப் பிரதி பிம்பரான ஈசுவரன்-க, பிரம்மம் க, ஆக-அ, இந்தஎட்டுஞ் சகலப் பிராணிகளாலுஞ் சமுதாயமாக அனுபவிக்கப்படும். மற்ற இருபத்தெட்டுத் தத்துவமும் அவனவனால் பிரதக்காக அனுபவிக்கப்படும். அஃதெங்ஙனென்னில் பிருதிவி தத்துவம் ஒன்று இறக்கில் எல்லாருக்கும் ஆதாரமில்லை. மழை மறுக்கில் எல்லாருக்குஞ் சலமில்லை. தேயு இல்லாதிருந்தால் பாகமில்லை. வாயுவியக்கமில்லாவிட்டால் வாடை தென்றல் இல்லை. ஆகாசமிறக்கில் ஒருவருக்கும் அவகாசமில்லை.

மாயையும் மாயாப் பிரதி பிம்பரும் இறக்கின் சகல சமயத்துக்குந் தெய்வமில்லை. பிரமமில்லையேல் ஒருத்தருக்கும் அறிவில்லை. ஆகையால் இந்த எட்டும் எல்லாருக்குஞ் சமுதாயம். பிரதக் கெங்ஙனெனின் ஒருத்தனுக்குத் தூலசரீரமிறக்கில் எல்லோருக்குந் தூலசரீரம் இறவாதபடியினுலும் சூட்சும சரீரத்தி லொருவனுக்கு அங்கவைகுல்லியம் வந்தால் எல்லோருக்கும் வராதபடியினுலும் முத்தராயிருக்கின்ற சுகர் வாமதேவர் முதலானபேருக்கு அவித்தையுஞ் சீவனும் இறந்துபோயிருக்க மற்றபேருக்கெல்லாம் அவித்தைஞ் சீவனுமிறவாதபடியினுலும் இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தாஞகவும் தனக்கன்னியமாகவும் அனுபவிக்கப்படுகின்றவைகளாம்.

இந்தத் தத்துவம் முப்பத்தாறில் எப்போதுந் தாஞகவே காணப்பட்ட தத்துவம்-க, எப்போதுந் தனக்கு அன்னியமாகவே காணப்பட்ட தத்துவம்-எ, எப்போதுந் தாஞகவுந் தனக்கு அன்னியமாகவும் அனுபவிக்கப்பட்ட தத்துவம்-உஅ. அஃதெங்ஙனெனில் அவத்தாத்திரய சாட்சியா யிருக்கின்ற பிரமசைதன்னியம் எல்லா அவத்தையிலுந் தாஞகவே விளங்குகையினுலும் மற்ற தத்துவங்கள்போலத் தனக்கு அந்நியமாகக் காணப்படாதபடியினுலும் பிரமசைதன்ய மொன்றுமே

தானு யிருக்கப்பட்டது. பஞ்சபூதம் - ரு, மாயை க, மாயாப்பிரதி பிம்பர்-க, ஆக ஏழும் தன்றொழிலான பஞ்ச கிருத்தியம், தசாவதார முதலான தொழில்களொருகாலுந் தன்னுடைய தொழிலாகக் காணப் படாதபடியினுலும் இந்த ஏழு தத்துவமுந் தனக்கு அன்னியமேயல்லாமல் தானுகமாட்டா. மற்ற இருபத்தெட்டுத் தத்துவமும் நான் பிராமணன், நான் க்ஷத்திரியன், நான் வைசியன், நான் சூத்திரன், நான் பிரமசாரி, நான் கிருகஸ்தன், நான் வானப்பிரஸ்தன், நான் சந்நியாசி, நான் ஆண்மகன், நான் பெண்மகள், நான் கரியன், நான் சிவப்பன், நான் கட்டையன், நான் நெட்டையன், நான் பருத்தேன், நான் இளைத்தேனென்று தானுக வழங்குகின்ற தூலசரீரம் ஆறு தத்துவமும் மற்றொரு வேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் மாடு, என் கன்று என்றாற்போல என் சரீரம் பருத்தது, என் சரீரம் இளைத்தது, என் மயிர் நரைத்தது, என்சரீரம்தோன்றி இத்தனைநாள் ஆயிற்றென்று தான் வேறு, தூலசரீரம் வேறாக வழங்குகின்றபடியினுலும் நான் கண்டேன், நான் கேட்டேன், நான் தொட்டேன், நான் போகித்தேன், நான்கொடுத்தேன் நான் வாங்கினேன், நான் நடந்தேன், நான் புசித்தேன், நான்சிந்தித்தேன், நான்நிச்சயித்தேன், இந்தப் பஞ்சத்

துக்குச் சீவித்தேனென இவ்வாறு தானாக வழங்கு கின்ற சூட்சுசரீர தத்துவம் இருபதும் மற்றொருவேளை யிலே தனக்குப் புறம்புபட்டு என் வீடு, என் உடை மை யென்றாற்போல என்கண், என் காது, என்மூக்கு, என்னாக்கு, என்கை. என்கால், என்மனம், என்புத்தி, என்னகங்காரம், என்சித்தம், என்பிராணனென்று தான் வேறு, அவைகள் வேறாக வழங்குகின்றபடியினாலும் நான் அறிவேன், நான் அறியேனென்று தானாகவழங்கு கின்ற சிதாபாசனும் அஞ்ஞானமும், மற்றொருவேளையி லே தன்க்கு புறம்புபட்டு என் சீவன் என் அஞ்ஞான மென்று வழங்குகின்றபடியினாலும் இந்த இருபத்தெ ட்டு தத்துவமுந் தானாகவுந் தனக்கு அன்னியமாகவும் வழங்குகின்றது சித்தம். இப்படிச்சொன்ன குருவைப் பார்த்துச் சிஷ்பன்கேட்கும்படி, இந்தஇருபத்தெட்டுத் தத்துவமுந் தானானால் சாட்சியைப்போல ஒருதன்மை யாகத் தோற்றவேண்டுமே யல்லாமற் பஞ்சபூதத்தைப் போலத் தனக்கன்னியமாகக் காணக் கணக்கில்லை. இந்த இருபத்தெட்டுந் தனக்கன்னியமேயானால் எப் போதும் புறம்புபட்டே யிருக்கவேண்டும். அன்றித் தானாக வழங்கக் கணக்கில்லை. தானுமாய்த் தனக்கு அன்னியமுமாயிருக்குமென்கின்றது, இருட்டு ஆதித்த னென்றாற் போலாம். இது விருத்த மென்கின்ற

சங்கைக்குப் பரமார்த்தமாகத் தானென்கின்றது ஒரு வகையும், அத்தியாசத்திலே தானென்கின்றது ஒரு வகையும் ஆக இருவகையு முண்டு. சாட்சி சைதன்னியத்தைத் தானென்கின்றது பரமார்த்த மல்லாமல் உபசாரமல்ல. தனக்கன்னியமா யிருக்கின்ற இந்த இருபத்தெட்டையுந் தானென்கின்றது கட்டையைக் கள்ள னென்றாற்போலவும் பழுதையைப் பாம்பென்றாற் போலவும் புத்திர தாராதிகளைத் தானென்றாற் போலவும் மயக்கமே யல்லாமல் உண்மையல்ல. ஆகையினால் அஞ்ஞானகாலந் தொடங்கித் தானல்லவென்று காணப்பட்ட தத்துவம் - எ; இப்போது இப்படிப்பட்ட விவேகம் பண்ணின பின்னர், தான் அல்லவென்று காணப்பட்ட தத்துவம்-உஅ. ஆக இந்த முப்பத்தைந்து தத்துவங்களையும் அதற்குச்சொன்ன குணங்குறிகளுடனே கூடக் காண்கின்றது, கடத்தைப் பார்க்கின்றவன் கடத்திற்குப் புறம்பாகவே இருந்து கடத்தைப் பார்க்கின்றதுபோல இந்த முப்பத்தைந்தையுங் காண்கின்ற பேரறிவு. முப்பத்தாறுந் தத்துவமாகிய அது தானென்றறிந்து அதுதானே பிரமமென்று தெளிந்தவனே பிரம தரிசனமுடைய சீவன் முத்தனென்று சொல்லப்படு மென்றுத்தரம்.

இப்படிப் பிரமமே தானென்றும் மற்ற முப்பத்தைந்து தத்துவமுந் தனக் கன்னியமென்றும் பகுத்தறியாத அவிவேகிகள் அகங்காரக் கிரந்தியினாலே புத்திர தாராதிகள் தவிக்கின்றதைத் தான் தவிக்கின்றேனென்கின்ற மூடத்தனம்போல இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாலுங் கட்டுப்பட்டு அந்தக் கன்மத்தின்படியே சனனமரணாதி சமூசாரத்திலே அடிபடுகிறோமென்று மயங்குவன். பிரம சைதன்னியமே தானென்றும் மற்ற முப்பத்தைந்துந் தானல்லவென்றுந் தெளிந்த விவேகிக்கு அகங்காரக் கிரந்தி யற்றபடியினால் இந்த இருபத்தெட்டினுடைய தொழிலையும் நான் செய்யவில்லை யென்றும் இந்த இருபத்தெட்டும் புசிக்கின்றதை நான் புசிக்கவில்லை யென்றுந் திடப்படத்தேறி மயக்கமற்றிருக்கின்றபடியினால் இந்த இருபத்தெட்டினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டுக் கன்ம மில்லாதபடியினால் சனனமரணாதி சமுசாரமில்லாமல் முத்தனாகிப் பிரம மாத்திரமாகவே யிருப்பன். இவனைச் சீவன் முத்தனென்றுந் திடப் பிரக்ஞனென்றும் அதிவர்ணாச்சிரமி யென்றுங் குணாதீதனென்றும்

பகவத் பத்தனென்றும் பிராமணனென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்தத் தத்துவத்தை விசாரம்பண்ணி மோட்சமடையக் கடவர்கள்.

நாஞசிவவாதக்கட்டளை

முற்றுப்பெற்றது.


---

சர்வஞ்சின்மயம்.

ஓம் தத் சத்:

# சுத்தப் பிரம்மத்தில், உலக ஆரோபச் சித்திரப் படம்.

## நாஞசிவவாதக் கட்டளையின்படி கிரம சிருஷ்டி.



ஓம் தத் சத்.

## முற்பக்கத்திற்கண்ட படத்தில்காட்டிய லெக்கங்களின் பொருள்காட்டும் அட்டவணை.

1. சு—சுத்தப்பிரஹ்மம்.
2. அ-பி—அபின்னசத்தி.
3. பரை—பரையென்னும்சத்தி.
4. ப-பி—பரப்பிரஹ்மம்.
5. பரையின் அவிகிருதமுக்குண கற்பிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1. சுத்த சாத்விக ஆனந்த ரூபசத்தி. | | சச்சிதானந்த பிரஹ்மம் |
| 2. ஷை ஷை சித்து ரூபசத்தி. | | |
| 3. ஷை ஷை சத்து ரூபசத்தி. | | |
| 4. பரமானந்தர். | | |
| 5. பரிபூரணர். | | |
| 6. பரன். | | |

6. மூ-பி—விகுர்தமுக்குண மூலப்பிரகிருதி.
   1—மூலப்பிரகிருதியின் சாத்விக குணமாயை.
7. ஈ—ஈஸ்வரன்.
   1—விஷ்ணு. 2—பிரஹ்மா. 3—ருத்திரன்.
8. அ-வி—மூலப்பிரகிருதியின் ராஜசகுண அவித்தை.
9. ஜீவர்களான சிதாபாசன்.
   1—தத்துவ நிஷ்டன். 2. கர்ம நிஷ்டன்.
   3—சோம்பல் நித்திரை மயக்கமுள்ளவன்.
10. மூ-தா—மூலப்பிரகிருதியின் தாமதகுணம்.
11. ஆவரண சத்தி.
12. விட்சேபசத்தி

| | | |
|---|---|---|
| 13. சூட்சும ஆகாசம் | | சூட்சும பூதங்கள். |
| 14. ஷை | வாயு | |
| 15. ஷை | தேயு | |
| 16. ஷை | அப்பு | |
| 17. ஷை | பிரிதிவி | |

18. ஷை பூதங்களின் சாத்விக குணங்களில் வியட்டியில் உண்டான ஞானேந்திரியங்கள்—5.
    1—சுரோத்திரம். 2—தொக்கு. 3—சட்சு. 4—சிங்வை. 5—ஆக்கிராணம்.
19. ஷை பூதங்களின் சாத்விக குணங்களின் சமட்டியில் உண்டான அந்தக்கரணம்—5.
    1-உள்ளம். 2-மனம். 3-புத்தி. 4-சித்தம். 5-அகங்காரம்.
20. ஷை பூதங்களின் ரஜோகுணங்களின் வியட்டியில் உண்டான கர்மேந்திரியங்கள்—5.
    1-வாக்கு. 2-பாணி. 3-பாதம். 4-பாயுரு. 5-உபத்தம்.
21. ஷை பூதங்களின் ரஜோகுணங்களின் சமட்டியில் உண்டான வாயுக்கள்—5.
    1—வியானன். 2—பிராணன். 3—அபானன்.
    4—சமானன் 5—உதானன்.
22. ஷை பூதங்களின் தாமதகுணம்சம்—5.
    ஆ—ஆகாசம் வா-வாயு. தே-தேயு. அ-அப்பு. பி-பிரிதிவி.
23. ஓர் பாதி $\frac{1}{2}$ ஷை பூதங்கள் ஐந்தில் ஒவ்வொன்றையும் இரண்டு பாகமாக்கினதில் ஓர் பாதிகளுக்கு $\frac{1}{2}$ அடையாளம் இடப்பட்டிருக்கிறது.
24. மீதம்பாதி நான்காக வகுத்தது 1-முதல் 20-வரை லக்கம் இடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு லக்கத்தையும் அரைக்கால் அரைக்கால் பாகமாகத் தெரிந்துகொள்க.
25. பஞ்சீகரணம் பண்ணின தூலபூதங்கள் ஐந்து.
    "ஐந்து பூதமும்பத்தாக்கி அவைபாதி நன்னான்காக்கி,நந்துதன் பாதிவிட்டு நாலொடு நாலுங்கூட்ட, வந்தன தூலபூதம்"
    என்று கைவல்யம் கூறியபடியும்,
    "தன்மாத்திரைக ளைந்தினையு மோரொன்றிரண்டாய்ப் பகுந் தொன்றை, நன்னாலாக்கித் தன்பாதி யொழிந்த நாலினுடன் கூட்டி, பின்னே பலாத வைந்நான்கி லியல்பிற் கூட்டலானதி, பின்னே தூலபூதமெனப் பிறக்குமெனவே பெயர்த்துரைத் தான்" என்ற பிரமகீதைப்படியும் அர்த்தம் பண்ணிக்கொள்க.
26. ஷட்கோசதத்ததுவம்:—சர்மம், உதிரம், மாமிசம், சநாயு, அத்தி, மச்சை ஆக 6.
27. நால்வகைத்தோற்றம்:—சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பீசம் ஆக 4.
28. மூவகைஜாதி:—உத்தமம், மத்திமம், அதமம் ஆக மூன்று ஜாதி,

### விசார சாகரம் ஐந்தாவது தரங்கம் 241-வது நம்பர் 2-வது பாரா.

பிரம விசாரத்தால் எதார்த்த ஞானம் உண்டாகாதவனுக்கு லயசிந்தனையின் பொருட்டும் உற்பத்திக்கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது. எந்தக் கிரமத்தினால் உற்பத்தி சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கு விபரீதக்கிரமத்தினால் லயசிந்தனை செய்யவேண்டும். அந்த லயசிந்தனையால் அத்வைதப் பிரஹ்மத்தில் புத்தி ஸ்திரப்படுகிறது. அந்த லயசிந்தனைப் பிரகாரமே பஞ்சீகரணக் கிரந்தத்தில் வார்த்திகக்காரரான சுரேஸ்வராச்சாரியார் குறிப்பிட்டிருக்கிறார்.

---

தத்து சொப்பனமுஞ் சுழுத்தியி லசத்தாந்
தன்மைபோற் சத்திலா திருக்குஞ்
சுத்தபூரணமாய் நித்திய மாகித்
துலங்கிய சொரூமாஞ் சிவோகம். (3)

பழுதைதன் னிடத்திற் பாம்புதோன் றுதல்போற்
பரப்பிர மத்திடை யதனிற்
கழிதரு மஞ்ஞா னத்தினாற் சீவ
னுதித்திடக் கண்டவ னொருவன்
பழுதையென் றதனாற் சர்ப்பமோகமும்போய்ப்
பழுதையாய்க் கண்டது போல
வழுவில்தே சிகனார் சீவனீ யன்றெனன்
றறைந்திட வாகினேன் சிவோகம். (4)

எமக்குமன் னியமா முலகமொன் றில்லை
யெவ்வுல கங்களெம் மிடத்திற்
சமித்துவுற் பவமா மாதலான் மாயை
வடிவம தேதெனிற் சாற்ற
வமைத்தகண் ணாடிவிம்பமா நிழல்போல்
அடங்கியெம் மிடத்தினில் விளங்குந்
தமத்துவ மில்லாச் சச்சிதா னந்த
தற்பத விமலமாஞ் சிவோகம். (5)

சாக்கிர மதனி லிந்திரியங்கள்
தமக்குமேற் சாட்சியாஞ் சிவோகம்
தேக்குசொப் பனத்தி லுலகரூ பமதாய்ச்
செய்மனச் சாட்சியாஞ் சிவோகம்
தாக்கிய சித்த நாசமாஞ் சுழுத்தி
யவத்தையிற் சாட்சியாஞ் சிவோகம்
நீக்கமில் துரியா னந்தமாஞ் சர்வ
நிர்மல சாட்சியாஞ் சிவோகம். (6)

விவேக சட்கம் முற்றிற்று.

## சிவானந்த போதம்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலு நீர்வாழுஞ் சாதியுண்டு
அநேககுல மனிதருண்டு
மனிதரிலு மனிதருண்டு வானவரு
மனிதராய் வருவ துண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே
அருமையென வகுத்தார் முன்னோர்.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.